


# தலைப்பு: இளந்தளிர்

## வழங்கியோர்

பச்சை நிறப் பட்டு உடுத்திய
இளம் தளிரே !
இறுகிய மனமும் "இளைப்பாறுமே "
உன் மடிமீது தலை சாய்க்க !

ஆடுகளும் "பசியாறுமே "
உணவாக உன்னை விழுங்க !
பனித் துளிகளும் "பரவசம் காணுமே" உன்னை
தழுவி !

கவிஞனின் கலை அகமும்
ஆனந்தக் "கூத்தாடுமே" !
உன் அழகில் மயங்கி !

பச்சிளம் குழந்தையின்
பாத மென்மை அல்லவா நீ !

இளம்தென்றல் படுத்துறங்கும்
பட்டு மெத்தை அல்லவா நீ !

இயற்கை அன்னையின் செல்லக்குழந்தையோ நீ !

*கவிதாயினி சை. சபிதா பானு (காரைக்குடி)*

பச்சை மேட்டில் பாசப் பிணைப்பில்
இச்சை கொண்டு ஈர்க்கும் நட்பாம்

ஓரக் கண்ணால் ஒளியைக் கொடுத்து
இரந்து ஈர்க்கும் இன்ப மொழியாம்

வஞ்சம் இல்லா வாசப் பூக்கள்
கொஞ்சிப் பேசும் கிளியின் மொழியாம்

ஆறறிவும் ஐந்தறிவும் அன்பால் பிணைந்திருந்து
தேறிவிட்ட இளந்தளிராம் தேவலோக
கண்மணிகளாம்.

*சரளா விமலராஜா*
*சுவிஸ்*